என்றுல் நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கின்ற ஐ.ஏ.எஸ். பதவி களுக்கு மாநில சர்வீஸ்களில் இருக்கின்றவர்களுக்கு அதிகமான பதவி உயர்வு அளித்து நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஐ.ஏ.எஸ். பிரமோஷன் இப்போது இருப்பதைவிட இன்னும் அதிகமாக உயர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் 8 அல்லது 9 அதிகாரிகளே அனுப்புகிறது. இந்த ஆண்டுக்கு 5 பேரை அனுப்பினுல் போது மென்று கேட்டிருக்கிறோம். இவை மத்திய அரசின் பரிசிலனையில் இருப்ப தாக அறிகிறேன்.

ஐ. ஸி. எஸ். அதிகாரிகள்

*** 694 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் தற்பொழுது பணிபுரிந்து வரும் ஐ.சி.எஸ். அதிகாரிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : மூன்று ஐ.சி.எஸ். அதிகாரிகள் தமிழ் நாடு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பதவித் தொகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கு நியமனம் செய்யப் படும் அதிகாரிகள் தொகுப்பின் கீழ் இப்போது இந்திய அரசில் பணி யாற்றி வருகின்றனர்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே இந்த ஐ.ஸி.எஸ். அதிகாரிகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையே உள்ள அவர் களுடைய சர்வீஸ் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் முன்பு முயற்சி செய்ததே, அதுகுறித்து நமது மாநில அரசின் கருத்து என்ன ? ஏதேனும் பரிந்துரைகள் செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அப்படி ஒன்றும் தகவல்கள் இந்த அரசுக்கு இல்லை.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : நமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு பிரிட்டிஷாரின் நேரடி நிர்வாகத்தில் இருந்த மாகாணங்களில்தான் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளேப் போட்டார்கள். திருவிதாங்கூர், கொச்சி, மைசூர், புதுக்கோட்டை போன்ற சுதேச மன்னர் களுடைய ராஜ்யத்தில் அவர்களே திறமையுள்ள அதிகாரிகளை கீழ் நிலையில் இருந்து ப்ரமோஷன் செய்து மாவட்ட கலெக்டர்களாகக் கூடப் போட்டிருந்தார்கள். அவர்களும் நல்ல முறையில் பணியாற்றி வந்தார்கள். அது போல இன்றைக்கு நம் தமிழ்நாட்டிலும் ஐ.ஏ.எஸ். அதிகாரி களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு, கீழேயுள்ள அதிகாரிகளை அப்பதவிகளுக்கு உயர்த்த முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. வீராசாமி : இன்று நம்முடைய அரசாங்கத்தில் இருந்து தான் ஐ.ஸி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் தவறு செய்தால் தண்டிக்கின்ற அதிகாரம் நமக்கில்லை. டிரான்ஸ்பர்தான் செய்யலாம். அத்தகைய அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசாங் கத்தை நமது அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்காகத்தான் நாம் நம் கொள்கைகளை முழங்கி வருகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார் ஐ.ஸி.எஸ். அதிகாரிகளுக்கு என்று சில தனிச் சலுகைகள் உண்டு. அந்தச் சலுகைகளை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் அளிக்க நம் அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த அரசு என்பது புரிய வில்லை.

***695 *Q*.—THIRU N. DENNIS :** Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) the number of retired I.C.S. Officers now re-employed in State service ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஒருவர்.

(இ) திரு டி. ஏ. வர்கீஸ், ஐ.ஸி.எஸ். (ஓய்வு பெற்றவர்) சென்னை. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் தலைவராக மாநில அரசினால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : இதுபோன்று ஓய்வு பெற்ற ஐ.ஸி.எஸ். அதிகாரிகளைப் போடாது குறிப்பிட்ட துறையில் உள்ள நிபுணர்களை நியமிக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதில் மற்ற நிபுணர்களும் இருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சீக்கிரத்தில் பரிசீலித்து முடிவு செய்யப் படவேண்டிய ஒரு குழுவுக்கு ஓய்வுபெற்ற அதிகாரியைப் போடுவதால் அப்படியே அதை நீடித்துக்கொண்டு போகக்கூடுமே, அப்படியின்றி சர்வீஸில் உள்ள திறமைசாலிகளைப் போடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் சீக்கிரத்திலேயே ஒரு அறிக்கை அளிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். நீண்ட காலம் நீட்டிக்கொண்டு போவார் என்று நினைப்பதே தவறு.